R4898

THE PEACE OF GOD
தேவ சமாதானம்

"எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள் காத்துக்கொள்ளும்." "உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை. " பிலிப்பியர் 4:7; சங்கீதம் 119:165

தேவனுடைய பிரமாணம் தேவனுடைய சித்தத்தை குறித்துக் காட்டுகிறது. நல்ல சிந்தையுடைய, சரியாக தீர்மானம் உடையவர்கள் தேவனுடைய சித்தம் சரியாக செய்யப் பெற்றிருப்பார்கள். ஆரம்பத்தில் தேவனுடைய சித்தம் மனிதனுடைய சுபாவத்தில் எழுதப்பட்டிருந்தது. அங்கே பாவம் வந்த பிறகு, தேவன் அதை இஸ்ரயேலர்களுக்காக கற்பலகைகளில் எழுதினார். கிறிஸ்தவர்கள் இந்த பிரமாணங்களுக்கு முடிந்தவரை கீழ்ப்படிவது நீதியாக இருக்கிறது. தேவனுடைய சித்தத்தை செய்வதில் நாம் சந்தோஷம் அடைகிறோம்.

தேவனுடைய பிரமாணத்தை நேசிப்பது, அவர் ஒரு பெரிய திட்டத்தை (நோக்கத்தை) வைத்திருக்கிறார் என்பதை உணருதல்; தேவனுடைய சித்தம் என்ன என்பதை கண்டுபிடிப்பதில் சந்தோஷம் அடைதல்; அவருடைய அன்பு, ஞானம், நீதி மற்றும் வல்லமையில் முழு நம்பிக்கையும் வைத்தல் ஆகும். இப்படி செய்கிற அனைவரும் மாபெரும் சமாதானத்தை பெறுவார்கள். தெய்வீக நீதியின் செயல்பாடுகளை அவர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள். ஆனால் தேவன் தவறு செய்ய முடியாதவர் என்பதில் முழு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இப்படியாக அவர்கள் அவர் மேல் விருப்பம் கொண்டு நம்பிக்கை வைப்பதில் சமாதானம் பெறுகிறார்கள்.

இந்த வசனத்தில் அப்போஸ்தலர் மனதிற்கும் இருதயத்துக்கும் உள்ள வேறுபாட்டை காண்பிக்கிறார். நாம் இந்த காரியங்களில் நல்ல உணர்வுகளை கொண்டிருக்க வேண்டியதோடு, நமது மனம் சமாதானத்தில் இருக்க வேண்டும். சில காரியங்களில் நாமே அர்ப்பணம் செய்த பிறகு, நாம் அவரிடமிருந்து பிரிக்கப்பட்டதாக உணர்வோம். நாம் கர்த்தரிடத்தில் நெருங்க வேண்டும் என்பதை நமது இருதயம் அறியும். மறுபடியும் நாம் நமது மனசாட்சிக்கு விரோதமாக எதையாவது செய்வோம். நாம் மறுபடியும் அவருடன் நல்லிணத்துக்கு வருவதற்கு ஜெபத்தின் மூலம் முயற்சிக்க வேண்டும். இப்படியாக நாம் நல்லிணக்கத்தை அடைய வேண்டும். நமக்காக தேவன் ஒரு ஏற்பாட்டை செய்திருக்கிறார். நமக்காக ஒரு பரிகாரியை கொடுத்திருக்கிறார். (1 யோவான் 2:1) நமக்காக முதல் தடவை தேவனுடைய சந்நிதானத்தில் தோன்றி அவரே, நமக்காக பரிந்து பேச என்றென்றைக்கும் ஜீவிக்கிறார். ஆகையால் அவர் செய்த ஏற்பாட்டின் மூலமாக நாம் கர்த்தரிடத்தில் வருகிறாம். ஏற்ற சமயத்தில் கிருபையையும் பெறுவதில் நாம் சந்தோஷம் அடைகிறோம்.

வசனமானது நமது சொந்த சமாதானத்தை குறிப்பிடவில்லை. ஆனால் தேவனுடைய சமாதானத்தை குறிப்பிடுகிறது. தேவனுடைய வல்லமையை, அவரது நற்குணத்தை, நம்மை தமது பிள்ளைகளாக தமது வலது கையிலினால் பற்றிக்கொள்ள அவரது விருப்பத்தை உணருவதின் மூலம் சமாதானம் நமக்கு வருகிறது. இந்த சமாதானமானது விரோதமான அல்லது கவலை அளிக்கிற எண்ணம் அல்லது பயத்துக்கு எதிராக நம்மை தொடர்ந்து பாதுகாக்கிற ஒரு காவலாளியாக இருக்கிறது. அது இருதயத்தில் கர்த்தருடன் சமாதானம், ஐக்கியம் மற்றும் அந்நியோந்நியமாக இருக்கும்படி கிறிஸ்தவனின் மனதை வைக்கிறது. அது தெய்வீக சக்தி, ஞானம் மற்றும் அன்பு ஆகியவற்றை உறுதியளித்து அவனுக்கு போதித்து அவனது தர்க்க ரீதியான திறமையையும் மனதையும் பாதுகாக்கிறது.

கிருபை, ஞானம் மற்றும் ஆவியின் கனிகளாகவும், கர்த்தருக்கும் சகோதரருக்கும் ஊழியம் செய்யும் சந்தர்ப்பங்களுக்காகவும், தேவனுடைய பிரியமான குமாரனின் சாயலுக்குள் அதிகமதிகமாக வளர்வதற்காகவும் நாம் வேண்டுதல் செய்ய வேண்டும். இந்த நிலைமைகளின் கீழ், வாக்குத்தத்தம் பண்ணபட்ட "எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம்" நமது இருதயங்களையும் சிந்தைகளையும் காத்துக்கொள்ளும். சுயநலமும் லட்சியமும் இருதயங்களில் இடம் பெறாது. ஆழமான ஜலத்தில் இருக்கும் போது கூட தெய்வீக சமாதானம் நமது இருதயங்களில் இருந்து அவற்றைக் காத்துக்கொள்ளும்.

அப்போஸ்தலர் யாருக்கு கூறினாரோ அவர்கள், தேவனுடைய நிபந்தனைகளைக் ஏற்றுக்கொண்டதின் மூலம் அவருடன் நல்லிணத்திலிருக்கிறார்கள் என்பது அப்போஸ்தரின் கருத்தில் காணப்படுகிறது. சகல எதிர்ப்புகளிலிலுமிருந்து திரும்பி, அவர்கள் விசுவாசம், கீழ்ப்படிதல், சுயதியாகம் மற்றும் மரணம் வரையிலான அர்ப்பணம் ஆகியவற்றின் மூலம் அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள். தேவனுடைய சமாதானம் இவர்களில் இருந்து தொடர வேண்டும் என்று வற்புறுத்துகிறார். அவர்கள் அந்த சமாதானத்தினால் பாதுகாக்கப்பட வேண்டும். நமது மாபெரும் பரிகாரி மூலமாக இந்த சமாதானத்துக்குள் நாம் நுழைந்ததால், அவர் நமது பரிகாரியாக தொடர்ந்து இருப்பதின் மூலமே நாம் இந்த சமாதானத்தில் தொடர முடியும் என்று "கிறிஸ்து இயேசுவுக்குள்" என்ற சொற்றொடர் உரைக்கிறது. இல்லையென்றால், மாம்சத்தின அபூரணத்தினால் நல்லிணக்கத்தில் நாம் தொடர்ந்து இருக்க முடியாது.

"ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சாயஞ்செய்யும் கிருபையை அடையவும், தைரியமாக கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம்." (எபிரேயர் 4:16) இப்படியாக நாம் வந்து தினமும் "எங்களுக்கு எதிராக தப்பிதம் செய்தவர்களை நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் தப்பிதங்களை எங்களுக்கு மன்னியும்" என்று கேட்போமாக. நாம் சமாதானத்தில் நிலைத்திருப்போம்; ஏனெனில் நாம் இந்த மாபெரும் பரிகாரியை பெற்றிருக்கிறோம். ஆகையால் இந்த சமாதானம், மகா பரிகாரியின் மூலம் கிருபை தொடர்ந்து கிடைப்பதால் நிலைத்திருக்கிறது.